**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 6.**
**முன்னிலை: முனைவர் ச.கண்ணப்பன்.**
**ந.க.எண்.2902/அ1/இ1/2024, நாள்: 08.11.2024.**

**பொருள்:** தமிழ்நாடு பள்ளிக்கல்விப் பணி – தமிழ்நாடு பள்ளிக்கல்விப் பணி விதிகளில் வகுப்பு IV–இன் கீழ்வரும் மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்கள் – அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் அதனையொத்த பணி நிலையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு – மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்தப் பணியிடத்திற்கு பதவி உயர்வு / பணிமாறுதல் அளித்து ஆணையிடுதல் – சார்பு.

**பார்வை:**
1. அரசாணை (நிலை) எண்.162 பள்ளிக் கல்வித் (பக1(1)) துறை, நாள்.10.07.2024.
2. அரசாணை (நிலை) எண்.222 பள்ளிக் கல்வித் (பக1(1)) துறை, நாள்.08.10.2024.
3. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.2902/அ1/இ1/2024, நாள்.09.10.2024 மற்றும் 30.10.2024.

******

தமிழ்நாடு பள்ளிக்கல்வி பணி விதிகளில் வகை IV–ன்கீழ் வரும் மாவட்டக்கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்தப் பணியிடங்களுக்கு 2024–2025 ஆம் ஆண்டிற்கான பதவி உயர்வு / பணிமாறுதல் மூலம் நிரப்பப்படவேண்டிய மொத்தக் காலிப்பணியிட மதிப்பீடு 59 என அரசளவில் நிர்ணயம் செய்து பார்வை 1–இல் காணும் அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டதன் தொடர்ச்சியாக, மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்களுக்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலை ஏற்பளித்து பார்வை 2–இல் காணும் அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, அரசால் ஏற்பளிக்கப்பட்ட தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலில் வரிசை எண். 1 முதல் 45 வரையுள்ள அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு, தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி விதிகளில் (Section 8A – Tamil Nadu School Educational Service – Service Manual Volume – II) விதிகளில் விதி 2 (C) (iii)–இன்படி பதவி உயர்வு / பணிமாறுதல் வழங்கியும், பார்வை 3–இல் கண்டுள்ள 09.10.2024 நாளிட்ட செயல்முறைகளில் ஆணைகள் வழங்கப்பட்டது. அச்செயல்முறைகளின்படி மாவட்டக் கல்வி அலுவலராக பணிமாறுதல் பெற்ற அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியகள் இருவர் தமக்கான பணிமாறுதலை உரிமை விடல் செய்த நிலையில் தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி விதிகளில் (Section 8A – Tamil Nadu School Educational Service – Service Manual Volume – II) விதிகளில் விதி 2 (d) (iv)–இன்படி, பார்வை 2–இல் காணும் அரசாணையின்படி ஏற்பளிக்கப்பட்ட தேர்ந்தோர் பெயர் பட்டியலிருந்து விகிதாச்சார சுழற்சி எண்.987 மற்றும் 989–இல் கண்டுள்ள அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலராக பணிமாறுதல் வழங்கியும், விகிதாச்சார சுழற்சி எண்.988 மற்றும் 990–இல் கண்டுள்ள அரசு உயர்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலராக பதவி உயர்வு வழங்கியும், பார்வை (3)–இல் காணும் 30.10.2024 நாளிட்ட செயல்முறைகளில் ஆணை வழங்கப்பட்டது.

த.பி.பா..

